07. கன்னி ஈன்ற செல்வமே (பாரம்பரியப் பாடல்)
இயல், இசை: அருட்திரு. சிகாமணி சே.ச
பாடியவர்: டெய்சி என்சோன்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

கன்னி ஈன்ற செல்வமே
இம்மண்ணில் வந்த தெய்வமே
கண்ணே மணியே அமுதமே என்
பொன்னே தேனே இன்பமே
எண்ணம் மேவும் வண்ணமே
என்னைத் தேடி வந்ததேன்
ஆரிரோ ஆராரோ ஆரிரோ ஆராரோ

1. எங்கும் நிறைந்த இறைவன் நீ
நங்கை உதரம் ஒடுங்கினாய்
ஞாலம் காக்கும் நாதன் நீ
சீலக்கரத்தில் அடங்கினாய்
தாய் உன் பிள்ளை அல்லவா
சேயாய் மாறும் விந்தை ஏன்?

2. வல்ல தேவ வார்த்தை நீ
வாயில்லாத சிசுவானாய்
ஆற்றல் அனைத்தின் ஊற்றும் நீ
அன்னை துணையை நாடினாய்
இன்ப வாழ்வின் மையம் நீ
துன்ப வாழ்வைத் தேர்ந்ததேன்?

ஆராராரோ ஆரிரோ ஆராராரோ ஆரிரோ ஆராராரோ
ஆரிரோ ஆராராரோ ஆரிரோ ஆராராரோ

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com**
**(Christmas 2021)**